**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 24/2025**

**Deposition of P.W. 5**

**Name** : **Thiru.** இராமு

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **22.07.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது குலசேகரம் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியும். மற்ற 2 முதல் 4 க்கு எதிரிகளையும் தெரியும். கடந்த 31.08.2013 அதிகாலை 4.30 மணியளவில் குலசேகரம் வனச்சரகம் வீரப்புலி காப்புக்காடு பேச்சிப்பாறை பீட் வராமனை சராகம் ஆனைச்சுழியன் பகுதியில் ஆழத்துக்குன்று 4 காய்ந்த தேக்கு மரத்துண்டுகளை தண்ணீர் வழியாக கடத்தி செல்ல முயன்ற வனக்குற்றத்தை கட்டுப்பிடித்து ஓஆர். 18/2013 வன வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரிகளின் அச்செயல் 1882 ஆம் வருட தமிழ்நாடு வனச்சட்டம் பிரிவு 5 21DEF ன் படி தண்டிக்கப்பட வேண்டியக்குற்றம். 4 தேக்கு மரத்துண்டுகளும் 1882 தமிழ்நாடு வனச்சட்டம் பிரிவு 49 ஏ 2 ன் படி மாவட்ட வன அலுவலரால் அரசுடைமையக்கப்பட்டது. சம்பவ

இடமானது வீரப்புலி காப்புக்காடு என்பதால் அதற்கான அரசாணையும் கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் என்பதால் அதற்கான அரசாணையும் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சிகளை விசாரித்து அ படிவம் தயாரித்து மாவட்ட வன அலுவலர் அவர்களிடம் சி படிவத்தில் ஒப்புதல் பெற்று அ படிவத்தினை நீதிமன்றத்தில் சமர்பித்தோம். (**கடந்த 17.7.1903 ஆம் தேதியிட்ட வீரப்புலி காப்பு காடு குறித்த அரசாணை நகல் அ.சா.ஆ.4 ஆகவும், 12.09.1925 ஆம் தேதியிட்ட திருவனந்தம் அரசால் வெளியிடப்பட்ட அரசாணை நகல் அ.சா.ஆ.5 ஆகவும், 20.11.2007 ஆம் தேதியிட்ட தமிழக அரசின் அரசாணை நகல் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**